செ.வெ.எண் : 349 நாள் : 13.06.2011

**செய்தி**

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதயதெய்வம் **அம்மா** அவர்களின் ஆணைக்கிணங்க பொதுவிநியோகத் திட்டத்தின் மூலம் வழங்கப்படும் 20 கிலோ இலவச அரிசி பொதுமக்களுக்கு தங்குதடையின்றி வழங்கப்படுகிறதா – சென்னையில் மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.செல்லூர்.**கே.ராஜு** அவர்கள் இன்று திடீர் ஆய்வு.

***********

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதயதெய்வம் **அம்மா** அவர்களின் ஆணைக்கிணங்க நியாயவிலைக் கடைகள் மூலம் வழங்கப்படும் 20 கிலோ இலவச அரிசி பொதுமக்களுக்கு தங்குதடையின்றி சரியான எடையில் வழங்கப்படுகிறதா என்பதை கண்டறிய மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.செல்லூர்.கே.ராஜு அவர்கள் இன்று (13/6/2011) காலை 10.30 மணியளவில் சென்னை அடையாறு, சாஸ்திரி நகரில் உள்ள டி.யு.சி.எஸ். நியாயவிலைக் கடை 1, 2, 3 மற்றும் 4 ஆகிய கடைகளை திடீரென ஆய்வு செய்தார். அப்போது அங்கு கூடியிருந்த பொதுமக்களிடம் 20 கிலோ அரிசி தங்குடையின்றி கிடைக்கிறதா என்று கேட்டறிந்தபோது அங்கு கூடியிருந்த பொதுமக்கள், அரிசி, பருப்பு, பாமாயில் உள்ளிட்ட அனைத்து அத்தியாவசியப் பொருட்களும் நியாயமாக கிடைக்கிறது என தெரிவித்தனர். பின்னர் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அரிசியின் தரம் மற்றும் எடை ஆகியவற்றை சரிபார்த்தபோது பில் இயந்திரம் பழுதடைந்துள்ளதை கண்டறிந்து இவற்றை உடனடியாக அப்புறப்படுத்தி புதிய பில் போடும் இயந்திரத்தை உபயோகிக்குமாறு கேட்டுக்கொண்டதோடு கையினால் பில் போடும்போது கார்பன் பேப்பர் வைத்துதான் பில் போடவேண்டும் என்று விற்பனையாளர்களுக்கு அறிவுரை வழங்கினார். மேலும், பொதுமக்களின் விருப்பத்திற்கு ஏற்ப தரமான அத்தியாவசியப் பொருட்களை வினியோகிக்குமாறும், சரக்கு இருப்புகளை சரியாக வைத்துக்கொள்ளுமாறும், குறையும் பட்சத்தில் சம்பந்தப்பட்ட பணியாளர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று எச்சரித்தார்.

1/1

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9